# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2022

**10** - ஆம் வகுப்பு

# தமிழ்

பதிவு எண். | | | | | | | |

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

## பகுதி - I

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **7 X 1 = 7**

1. தமிழ் இனத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது ..................
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
2. 'கோப்பர்கேசரி' என்ற பட்டம் யாருக்கு வழங்கப்பட்டது ?
   அ) முதலாம் ராஜராஜசோழன் ஆ) குலோத்துங்க சோழன்
   இ) இரண்டாம் ராஜராஜசோழன் ஈ) ராஜேந்திரசோழன்
3. வெண்பாவிற்கு உரிய ஓசை ..................
   அ) செப்பல் ஆ) அகவல் இ) துள்ளல் ஈ) தூங்கல்
4. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது ..................
   அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
5. ஆநிரை கவர்தல் .................... திணை
   அ) வெட்சி ஆ) கரந்தை இ) காஞ்சி ஈ) வஞ்சி

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

"ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானும் அறிந்தவை; அறிக !"

6. இப்பாடலை எழுதியவர் ..................
   அ) பாரதிதாசன் ஆ) வாணிதாசன் இ) கண்ணதாசன் ஈ) புரட்சிதாசன்
7. 'அவனும் யானுமே' என்ற தொடரில் 'அவனும்' என்று குறிப்பிடப்படுபவர் ..................
   அ) கண்ணதாசன் ஆ) அரசியல்வாதி இ) இறைவன் ஈ) மன்னன்

## பகுதி - II

**எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி** **5 X 2 = 10**

8. விடைக்கேற்ற வினா அமைக்க.
   அ) 1947 ஆகஸ்ட் 15ஆம் நாள் இந்தியா சுதந்திரம் அடைந்தது.
   ஆ) வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் என்பது இடையறாது செய்யும் அறப்பணியாகும்.
9. எத்தகையரோடு போர் செய்யக் கூடாது என ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகின்றார் ?
10. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர் ?
11. குறிப்பு வரைக : அவ்வையம்

12. தீவக அணியின் வகைகள் யாவை ?

13. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது ?

14. ஜெயகாந்தன் எழுதிய இரண்டு புதினங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 3 X 3 = 9**
**(19வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)**

15. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

16. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

17. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார் ?

18. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.
மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்றனர்.

அ) மன்னர்களுடைய அறத்தின்குறியீடுகளாகப் போற்றப்பட்டவை எவை ?
ஆ) அரசன் எதனைப் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் ?
இ) இப்பத்திக்கேற்ற தலைப்பு தருக.

19. "தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3 X 4 = 12**

20. தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.
மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றுக்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும்.

21. ஊர் பெயர்களின் மரூஉவை எழுதுக.
அ) திருச்சிராப்பள்ளி ஆ) கோயம்புத்தூர்
இ) கும்பகோணம் ஈ) புதுக்கோட்டை

22. நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் எழுதுக.

**எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளிக்க. 2 X 6 = 12**

23. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

24. நாட்டு விழாக்கள் – விடுதலை போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்கம் அளவில் "மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்" என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

25. உங்கள் ஊரில் கடின உழைப்பாளர் – சிறப்பு மிக்கவர் – போற்றத்தக்கவர், என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பான செய்திகளைத் தொகுத்து வழங்குக.

------